10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 212 வெள்ளிக்கிழமை டிசெம்பர் 22 2017 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48

## முற்றவெளியில் பிக்கு தகனம்

### முளைக்குமா விகாரை?

யாழ்ப்பாணம், டிசெ.22

யாழ்ப்பாணம் நாக விகாரையின் தலைமை விகாராதிபதி மீகஹஜதுரே ஞானரத்ன தேரரின் இறுதிக் கிரியைகள் இன்று இடம் பெற்று அவரின் உடல் தீயுடன் சங்கமமாக வுள்ளது.

யாழ். நகர கோட்டைக்கு அண் மையாக - முற்றவெளியில் அவரின் உடல் தீயுடன் சங்கமமாகவுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் படையினரின் பாதுகாப்புடன் நேற்று முடிவடைந்தன. இறுதிக் கிரியைகள் இடம்பெறவுள்ள இடம் தொல்பொருள் திணைக்களத்துக்கு சொந்தமானதாகும். அப்பகுதிக்கு எவரும் அனுமதியின்றி செல்ல முடியாது.

ஆனால் அங்கு, பிக்குவின் 06

## உயர்தர முடிவு டிசெ. 28 இல்

கொழும்பு, டிசெ.22

இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை இந்த மாதம் 28ஆம் திகதி வெளியிடவுள்ளதாக பரீட்சைகள் திணைக் கள ஆணையாளர் தெரிவித்துள்ளார். (அ)



## முல்லைத்தீவிலும் தமிழரசுக்குள் பிளவு

முல்லைத்தீவு, டிசெ.22

முல்லைத்தீவு - கரைதுரைப்பற்று பிர தேச சபைக்கு, இலங்கைத் தமிழரசுக் கட்சி யின் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் அணித் தலைவர் பீற்றர் இளஞ்செழியன் வேட்பாளராக நியமிக்கப்பட்ட போதும் இறுதி நேரத்தில் அவர் நீக்கப்பட்டுள்ளார். இதனால் முல்லைத்தீவுத் தமிழரசுக் கட் சிக்குள் பெரும் பிளவு ஏற்பட் டுள்ளது. இது தொடர்பில் 06

### 2–ஜி வழக்குத் தீர்ப்பு

## ராசாவும் கனிமொழியும் குற்றமற்றவர்கள்!

சென்னை, டிசெ.22

2 ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக் கில் முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா, தி.மு.க. தலைவர் மு.கரு ணாநிதியின் மகள் கனிமொழி உள்ளிட்ட 14 பேரும் குற்றமற் றவர்கள் என சி.பி.ஐ.,சிறப்பு நீதி மன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது. இதனையடுத்து திமுக தொண் டர்கள் உற்சாகத்தோடு, இந்தத் தீர்ப்பைக் கொண்டாடி மகிழ்ந் தனர்.

2007ஆம் ஆண்டு அகில இந் தியக் காங்கிரஸ் தலைமையி லான ஐக்கிய முற்போக்கு கூட் டணி அமைச்சரவையில் தொலை தொடர்புத் துறை அமைச்சராக ஆ. ராசா இருந்தார். அவரது பொறுப்பினர் கீழ் ஸ்பெக்ட்ரம் அலைவரிசை ஒதுக்கீட் டில் அனுமதிப்பத்திரம் வழங்கியதில் ஒரு 06

## நடராஜனுக்கு ஆப்பு?



யாழ்ப்பாணம், டிசெ.22

இந்தியத் துணைத் தூதுவர் ஆறுமுகம் நட ராஜன், இந்திய வெளியுறவு அமைச்சின் திடீர் உத்தரவால், யாழ்ப்பாணத்திலிருந்து மீள அழைக் கப்பட்டுள்ளார் என அறியமுடிகின்றது. அவரைப் பதவியில் தொடர்ந்து நீடிக்க விடுவதா, இல் லையா என்பது குறித்து இந்திய வெளியுற வுத்துறை தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ள தாகவும் கூறப்படுகின்றது.

அரசியல் ரீதியான அழுத்தம் காரண மாகவே அவருக்கு எதிராக இந்த நடவ 06

## யாழ். மாவட்டத்தில் 125 வேட்புமனு தாக்கல் 5 நிராகரிக்கப்பட்டன

யாழ்ப்பாணம், டிசெ. 22

யாழ். மாவட்டத்தின் 16 உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடுவதற்காக 125 வேட்புமனுக்கள் கிடைத்துள்ளன. இவற்றில் 5 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட் டன என தெரிவத்தாட்சி அலுவலர் 06

## 24 இலங்கையர்களை நாடு கடத்தியது ஆஸி.

கொழும்பு, டிசெ. 22

அகதிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட 24 ஈழத் தமிழர்களை அவுஸ்ரேலியா நாடு கடத்தியது.

இவர்கள் அனைவரும் நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். அவர்களைக் குடிவரவு - குடியகல்வு 06

## புளொட் உறுப்பினர் ஆவாவோடு தொடர்பு?

யாழ்ப்பாணம்,டிசெ.22

யாழில் பயங்கரமான ஆயுதங்களுடன் கைதான முன்னாள் புளொட் உறுப்பின ருக்கும் ஆவா குழுவுக்கும் தொடர்புகள் உள்ளதா என்ற கோணத்தில் விசாரணை கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள புளொட் அமைப்பின் பழைய அலுவலகத்தில் துப்பாக்கி உள் ளிட்ட பயங்கரமான ஆயுதங்களுடன் புளொட்டின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டார். இவரை நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் முன்னிலைப் படுத்தினர். இதன் போதே குறித்த நப ருக்கும் ஆவா குழுவுக்கும் தொடர்புகள் உள்ளதா என்பது தொடர்பில் விசாரணை கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகப் பொலி ஸார் மன்றுக்கு அறிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபரி 06

### வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தது

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.22

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ். மாவட்டம் முழுவதிலு முள்ள உள்ளூராட்சி சபை களில் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்களை யாழ். உத வித் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் நேற்று வியா ழக்கிழமை தாக்கல் செய்தது. யாழ். மாவட் 06





உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES
Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்

# எமனானது தாய்ப்பால்



கொழும்பு,டிசெ.22

பசறைப் பகுதியில் 4 மாதப் பச்சிளம் குழந்தை ஒன்று தாய்ப்பால் புரைக்கேறியதால், நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு உயிரிழந்தது.

குழந்தையின் தொண்டையில் பால் அடைத்த தன் காரணமாகவே பசறை வைத்தியசாலையில் குழந்தை அனுமதிக்கப்பட்டு, சிகிச்சைப் பலனளிக் காததால் உயிரிழந்துள்ளது. குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை பசறைப் பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)



# 1520 அகதிகள் நாடு திரும்பினர்

கொழும்பு,டிசெ.22

2017 ஆம் ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் இந்தியா மற்றும் புலம்பெயர் நாடுகளில் இருந்து 1,520 இலங்கை அகதிகள் நாடு திரும்பியுள்ளதாக ஐக்கிய நாடு கள் மனித உரிமைகள் பேரவையின் இலங்கை முகவரகத் தினர் நேற்று முன்தினம் புதன்கிழமை தெரிவித்தனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உத வியுடன் 619 குடும்பங்களைச் சேர்ந்த இலங்கை அகதிகள் பாதுகாப்பாக இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர். (அ)



# வெள்ளக்காடு

நெல்லியடி, டிசெ.22

தற்போது பெய்து வரும் மழை காரணமாக, நெல்லியடிப் புதிய சந்தையின் உட்பகுதி வெள்ளக்காடாகக் காட்சியளிக்கிறது. இதனால் சந்தைக் குச் செல்லும் நுகர்வோர் பெரும்சிரமத் துக்குள்ளாகின்றார்கள். பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு பல தடவை இதனைச் சீராக்குமாறு கோரிக்கை முன்வைத்தும் எந்த விதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை என வியாபாரிகளும், மக்களும் விசனம் தெரிவிக்கின்றனர். (அ-11)


# திருமலையிலும் நேற்று கூட்டமைப்பு வேட்புமனு

திருகோணமலை,டிசெ.22

உள்ளூராட்சி மன்றத் தேர்த லில் போட்டியிடுவதற்காக, திரு கோணமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்மைப்பு திருகோண மலை மாவட்ட தேர்தல் தெரிவத் தாட்சி அலுவலரிடம் நேற்று வியாழக்கிழமை வேட்புமனுத் தாக்கல் செய்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.துரை ரெட்ணசிங்கம், கிழக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் சி.தண்டாயுதபாணி மற்றும் திரு கோணமலை நகர சபையின் வேட் பாளர்கள், பிரதேச வேட்பாளர்கள் மற்றும் கட்சியின் பிரதிநிதிகள் உள் ளிட்ட பலர் இதன்போது கலந்து கொண்டனர். திருகோணமலை நகரசபை, கிண்ணியா நகரசபை, மெறவேவ பிரதேச சபை, குச்ச வெளிப் பிரதேச சபை, கந்தளாய்ப் பிரதேச சபை உள்ளிட்ட ஐந்து சபை களுக்கு இதன்போது வேட்புமனுக் கள் தாக்கல் செய்யப்பட்டன.(அ)

# குத்துக்கரணம்




கோப்பாய், டிசெ.22

முன்னால் சென்ற வாகனத்தை முந்திச் செல்ல முயன்ற மற்றொரு வாகனம் கைதடி- கோப்பாய் பாலத்தில் நேற்றுத் தடம் புரண் டது. சாரதி சிறு காயங்களுடன் தப்பித்தார். அதிக வேகத்தால் குறித்த வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்ததாலேயே, இந்த விபத்துச் சம்பவித்ததாகக் கூறப்படுகின்றது. (அ-11)

# ரோசியோடு அசாத் சாலி மோதல்

கொழும்பு, டிசெ.22

கொழும்பு மாநகர சபை மேயர் வேட்பாளராக முன்னாள் அமைச்சர் ரோசி சேனநாயக்கவை ஐக்கிய தேசிய கட்சி நியமித்துள்ளது.

இந்த நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயர் அசாத் சாலியை மேயர் வேட் பாளராக நியமித்துள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது. இதேவேளை, ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணி கொழும்பு மாநகர சபைக்கான மேயர் வேட்பாளரை இதுவரை நியமிக்கவில்லை என்றும் அறிய முடிகின்றது. (அ)

# ஜப்பான் கப்பல் இன்று புறப்பாடு



கொழும்பு,டிசெ.22

ஜப்பானியக் கடற்படையான கடல்சார் தற்காப்புப் படையின், ஜே.எம்.எஸ்.டி.எவ் செடோகிரி என்ற போர்க்கப்பல் ஒன்று திருகோணமலைத் துறைமுகத்துக்கு மூன்று நாட்கள் நல்லெண்ணப் பயணமாக நேற்று முன்தினம் புதன்கிழமை வந்தடைந்தது.

குறித்த கப்பலில் வந்த ஜப்பானியக் கடற்படையின் உயர் அதிகாரிகளுடன் இலங்கைக் கடற்படையின் உயர் அதிகாரிகள் நேற்றுக் கலந்துரையாடல்களை நடத்தினர். குறித்த கப்பல் இன்று வெள்ளிக்கிழமை திருகோணமலைத் துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டுச் செல்லவுள்ளது.(அ)

## கரவெட்டியில் ஒளிவிழா




கரவெட்டி பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேசசெயலர் எஸ்.ரஜீவ் தலைமையில் நேற்றுக் காலை 9மணியளவில் ஒளிவிழா நிகழ்வு நடைபெற்றது.(அ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
வெள்ளி, 22 டிசெம்பர் 2017 ethirolimedia@gmail.com

# இது கொடியேற்றம் மட்டுமே

உள்ளூராட்சித் தேர்தல் வந்தாலும் வந்தது, நாடு பாடுகின்றபாட்டைப் பார்க்கின்ற அழுவதா, சிரிப்பதா என்றாகிவிட்டது. அதிலும் தமிழர் பகுதிகளில் தினமும் நடக்கின்ற குத்துவெட்டுக்களைப் பார்க்கின போது, “இத்தனை பதவி வெறி பிடித்தவர்களா நம்மிடையே நல்லவர்கள் போல நடமாடினார்கள்?”என்ற எண்ணமும் எழாமல் இருக்காது. எத்தனையோ குழிபறிப்புக்கள், துரோகங்கள், மூடிமறைப்புகள், ஒர வஞ்சனைகள், தகிடுதத்தங்கள், இழுபறிகள் என்பவற்றின் நடுவே தான் வேட்புமனுத் தாக்கல்கள் நிறைவுக்கு வந்துள்ளன. இத்தனை காலமும் கட்சிகளின் தீவிர விசுவாசிகளாகத் திரிந்தவர்கள் தமக்கு ஆசனம் கிட்டாததால், அதே கட்சியின் எதிராளிகளாக மாறிய விந்தைகளும் நிகழவே செய்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் தான் இத்தனை குத்துவெட்டுக்கள் என்று பார்த்தால், கடைசி நேரத்தில் முல்லைத்தீவில் நடந்த சம்பவங்கள், எல்லாத் தேர்தல் கூத்துக்களையும் தூக்கிச் சாப்பிடுமளவுக்கு அமைந்திருக்கின்றன. கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட இருந்த வேட்பாளர் ஒருவர் வேட்புமனுவில், கையொப்பமிடச் சென்றபோது, அதே கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியினரால் வீடொன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். பின்னர் அங்கிருந்து தப்பித்து வந்த பெண் வேட்பாளர் கொடுத்த முறைப்பாட்டின் அடிப்படையில், அந்தப் பெண்ணைத் தடுத்து வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஆனாலும் அவர் வெறும் அம்பு மட்டுமே. அவரை ஏவியவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே என்றும் கூறப்படுகின்றது. முன்னரெல்லாம் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் மீதே இவ்வாறு, பேச்சுக்களாலும், செயல்களாலும் வன்மத்தைக் காட்டுவது வழக்கம். ஆனால் இப்போது சொந்தக் கூட்டமைப்பில் உள்ளவர்களையே வதைப்பதும், தாக்குதல் நடத்துவதும் ‘பஷனாகி’விட்டது.

இதே முல்லைத்தீவில் இன்னொரு கூத்தும் அதே கூட்டமைப்பில், அதே நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராக நடந்திருக்கிறது. கேப்பாபிலவு போராட்டத்தில் குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் மக்களோடு அடிக்கடி சந்தித்து, அந்தப் போராட்டத்தின் வெற்றியில் தனக்கும் பங்கிருப்பதாகக் காட்ட முனைந்திருந்தார். அவரை கேப்பாபிலவு மக்களிடம் அறிமுகம் செய்து வைத்ததோடு, அதன் பின்னர் பண்டாரவன்னியன், மகாத்மா காந்தி ஆகியோருக்கு, பார்ப்பவர்கள் காறி உமிழும் வண்ணம் கலைநயம் என்றால் கிலோ என்ன விலை என்று கேட்கக் கூடிய சிலைகளை அந்த நாடாளுமன்ற உறுப்பினர் அமைப்பதற்கும் ஒரு இளைஞர் உறுதுணையாக இருந்தார். வடக்கு மாகாண சபையின் முன்னாள் உதவித் தவிசாளர் அன்ரனி ஜெகநாதனின் மகனே அவர். பெயர் பீற்றர் இளஞ்செழியன். இப்படியெல்லாம் குறித்த நாடாளுமன்ற உறுப்பினரின் நிழலாக வலம் வந்த பீற்றர் இளஞ்செழியனுக்கும் அவரின் சகாக்களுக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட எந்த வாய்ப்பும் வழங்கப்படவில்லை. கடைசி நேரத்தில் கழுத்தறுக்கப்பட்டதால், அதே கோபத்தோடு, எந்த நாடாளுமன்ற உறுப்பினருக்கு கவசமாக விளங்கினாரோ அவருக்கு எதிராகவே கம்பு சுற்றத் தொடங்கியுள்ளார் பீற்றர் இளஞ்செழியன்.இப்போது முல்லைத்தீவில் தமிழரசுக் கட்சியின் உள்வீட்டு விவகாரங்கள் சந்திக்கு வந்து, சிரிப்பாய் சிரிக்கின்றன.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு தான் இப்படி தில்லாலங்கடி வேலை செய்ய முடியுமா? ஏன் நாங்கள் செய்ய மாட்டோமா என்று கேட்பது போல நடந்திருக்கிறார் சிறீதரன் எம்.பி. அவர் செய்ததைப் போல மற்றையவர்கள் செய்திருந்தால், தமிழரசுக் கட்சியின் சர்வதிகாரமும் கூட்டமைப்புக்குள் ஓங்கியிருக்கும், ஏனைய கட்சிகளையும் ஒதுக்கியிருக்க முடியும்.அப்படி என்ன செய்தார் சிறீதரன்?

ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்டபடி குறிப்பிட்ட வீதமான ஆசனங்கள் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் ஆகிய கட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டும். ஆனால் வேட்பு மனுவில் இடம்பெற்றதோ முற்றிலும் தமிழரசுக் கட்சியினரே. இதற்குப் பங்காளிக் கட்சிகள் போர்க்கொடி தூக்கிய போதும் சிறீதரன் அதனைச் சற்றும் சட்டைசெய்யவில்லை. அத்தோடு ‘கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்டத்துக்கான வேட்பு மனுக்களில் ரெலோ, புளொட் ஆகிய கட்சிகளுக்கும் வாக்குறுதியளித்தபடி ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன” என்று சொல்லியிருக்கிறார். அப்படியானால் யார் சொல்வது சரி?

இருவருமே உண்மையைத்தான் சொல்கிறார்கள். ஆனால் அதில் தான் ஒரு குழப்பம். உண்மையில் சில வருடங்களுக்கு முன்னர் புளொட், ரெலொ அமைப்பில் இருந்தவர்களை, தமிழரசுக் கட்சியினராக, ஞானஸ்தானம் செய்தே அவர்களுக்கு வேட்பு மனுவில் இடமளிக்கப்பட்டுள்ளது. வெளியில் இருந்து பார்த்தால் கிளிநொச்சியில் கூட்டமைப்பின் வேட்புமனுவில் ரெலோ, புளொட் ஆகிய கட்சிகளும் இருப்பது போலவே தோன்றும். ஆனால் உண்மையில் எல்லோருமே தமிழரசுக் கட்சியினரே. இப்படியான தகிடுதத்தங்களில் சிறீதரனை அடித்துக் கொள்ள ஆளே கிடையாது.

இப்படியெல்லாம், சினிமாப் படங்களில் வருவது போன்ற அபத்தங்களோடு நிறைவுக்கு வந்துள்ளது வேட்புமனுத்தாக்கல். இது கொடியேற்றம் தான். தேர்தல் எனும் தேர்த்திருவிழா வரும்வரை, நிறையக் களியாட்டங்கள் காத்திருக்கின்றன.

“உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்”

## உறுதியளித்ததை நிறைவேற்றுங்கள்
# சர்வதேச மன்னிப்பு சபை அறிவுறுத்து


நியூயோர்க், டிசெ. 22

மனித உரிமைகள் தொடர்பான உறுதிகூறல்கள் திட்டத்தை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புசபை அறிவுறுத்தியுள்ளது.

2015ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கிய நிலையில் அதனை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இந்தத் தாமதம் காரணமாக உண்மை மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் பொறுப்புக்கூறல் போன்ற விடயங்களில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக மன்னிப்புசபை சுட்டிக்காட்டியுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பணியக இயக்கம், உண்மையை கண்டறிதல் ஆணைக்குழு மற்றும் நீதிப் பொறிமுறை தொடர்பான சிறப்பு சபை என்பவை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் முன்னிலையில், இலங்கை அரசாங்கம் உறுதிக் கூறல்களை வழங்கியது.

இந்த விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் சுயாதீனமாக காட்டிய முனைப்புகள் வரவேற்கத்தக்கவை. எனினும் மீளெழாத உறுதிப்பாட்டுடன் குறித்த கடமைகளை மேற்கொள்ளும் திட்ட வரைவை அறிவிக்கவேண்டும் என்று இலங்கை அரசாங்கத்திடம் மன்னிப்புசபை கேட்டுள்ளது.



க.பொ.த (சா/த) பரீட்சை
# நேற்றுடன் நிறைவு

கொழும்பு, டிசெ.22

கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்குரிய விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் ஜனவரி 2 ஆம் திகதி ஆரம்பமாகும் எனப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

“இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ள இந்த விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் முதலாம் கட்டப் பணிகள் ஜனவரி மாதம் 2ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதி வரையும், இரண்டாம் கட்டப் பணிகள் ஜனவரி 23 ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி 3ஆம் திகதி வரையும் இடம் பெறவுள்ளன. விடைத்தாள் மதிப்பீட்டு நிலையங்களாக பயன்படுத்தப்படும் 57 பாடசாலைகள் இதற்காக முழுமையாக மூடப்படவுள்ளன” என்று பரீட்சைகள் திணைக்களம் மேலும் தெரிவித்தது.

இதேவேளை, கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைகள் நேற்றுடன் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.(அ)

# காரை. தம்பிராசாவுக்கு எதிராக தேர்தல் விதி மீறல் முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 22

தமிழ் அரசு கட்சியின் பெண் வேட்பாளர் ஒருவரின் தேசிய அடையாள அட்டை மற்றும் ஆவணங்களைப் பறித்துச் சென்றார் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர் மு. தம்பிராசாவுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்பான பஃப்ரலில் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட தம்பிராசாவுக்கு இடம் வழங்கப்படவில்லை. இதனால் அவர் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்தார். இந்நிலையில் அவரால் முன்னர் தமிழ் அரசுக் கட்சிக்கு அறிமுகப்படுத்தப்பட்ட பெண்ணுக்கு வேட்பாளராக சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே தமிழ் அரசுக் கட்சியில் போட்டியிடும் அவரின் அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ் மற்றும் திருமணப் பதிவுச் சான்றிதழ் என்பவற்றை தம்பிராசா வீடு தேடிச் சென்று பறித்துச் சென்றுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது. ஆசிரியை பல தடவைகள் தொடர்புகொண்டு கேட்ட போதும் தம்பிராசா அதனை வழங்க மறுத்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையிலேயே பஃப்ரல் அமைப்பில் தம்பிராசாவுக்கு எதிராக நேற்று முறைப்பாடு செய்யப்பட்டது. (ச)

# அதிபர்களுக்கு விசாரணை

நுவரெலியா, டிசெ.22

நுவரெலியா மாவட்டத்தில் பாடசாலை சீருடைக்கான வவுச்சர்கள் விநியோகிப்பத்தில் மோசடியில் ஈடுபட்ட அதிபர்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக கப்படவுள்ளன.

5 பாடசாலை அதிபர்கள் தொடர்பில் மத்திய மாகாண கல்வியமைச்சின் பணிப்பாளரின் கீழ் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவுள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

குறித்த பாடசாலைகள் மத்திய மாகாணத்துக்குரிய பாடசாலைகள் என்பதால் இது தொடர்பான விசாரணை அறிக்கைகளை வழங்குமாறு மத்திய மாகாண கல்வி பணிப்பாளர் திலக் ஏக்கநாயக்கவுக்கு கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராச்சி உத்தரவிட்டுள்ளார். (அ)

# பிரசாரத்தில் ஈடுபடோம்

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ் அரசுக் கட்சி பங்காளிக் கட்சிகளை புறமொதுக்கி வேட்பு மனுவைத் தாக்கல் செய்தது.

இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் தாங்கள் பிரசாரத்தில் ஈடுபடப் போவதில்லை என புளொட், ரெலோ கட்சிகள் அறிவித்துள்ளன. (ச)

## ஐக்கிய தேசியக் கட்சியும் வேட்பு மனுத் தாக்கல் செய்தது

ஐக்கிய தேசியக் கட்சி யாழ்.மாவட்டத்திலுள்ள 16 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்களை யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை தாக்கல் செய்தது.மேலும், சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தலைமையில் வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டது. (அ)

# வாள்வெட்டுக்காரர் பொலிஸால் கைது



யாழ்ப்பாணம்,டிசெ.22

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி, நுணாவில் பகுதியில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் இடம் பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் தேடப்பட்டு வந்த சந்தேகநபர் ஒருவரை சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நுணாவில் பகுதியில் கடைத் தொகுதியில் கடந்த ஒக்ரோபர் 12ஆம் திகதி பட்டப் பகலில் தலைக்கவசம் அணிந்த நிலையில் மோட்டார் சைக்கிளில் சென்ற நால்வர், அங்குள்ள ஒருவரைத் துரத்தி துரத்தி வாளால் வெட்டினர். இதில் நுணாவில் மேற்கைச் சேர்ந்த அரசரத்தினம் அபுதன் என்பவர் படுகாயமடைந்தார்.

இது தொடர்பாக அங்கிருந்த சி.சி.டி.வி. கமராவில் பதிவாகிய காட்சிகளை ஆதாரமாக வைத்து, சாவகச்சேரிப் பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது, மூவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டு, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்னர்.

கைதானவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளில் 4 ஆவது சந்தேகநபர் ஒருவரைப் பொலிஸார் தேடி வந்த நிலையில், 2 மாதங்களுக்குப் பின் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் இடம் பெற்றுவருகின்றன. (அ)

## இன்று நாளும் கோளும்

22.12.2017 வெள்ளிக்கிழமை ஏவிளம்பி வருடம் மார்கழி மாதம் 07 ஆம் நாள்

சதுர்த்தி காலை 08.13 மணி வரை | திருவோணம் பகல் 05.48 மணி வரை | சித்தயோகம்

இராகு காலம் 10.30 - 12.00 | சுபநேரம் 09.15 - 10.15 | எமகண்டம் 03.00 - 04.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| செலவு | முயற்சி | புகழ் | அலைச்சல் | குழப்பம் | சினம் | வீண்செலவு | சிந்தனை | கவனம் | தடங்கல் | பக்தி | ஓய்வு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறையில் மர்மக் காய்ச்சல்

அம்பாறை, டிசெ.22

அம்பாறை மாவட்டம், ஆலையடி வேம்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கீழ்பட்ட பகுதிகளில் ஒருவகை காய்ச்சலால் பீடிக்கப்படுபவர்கள் உயிரிழந்த சம்பவத்தைத் தொடர்ந்து, அப்பகுதிவாழ் மக்களுக்கு விழிப்பூட்டும் நடவடிக்கைகள், இரவு - பகல் பாராது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த மாத இறுதிப்பகுதியில் குறித்த காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 2 வயதுச் சிறுமியின் மரணத்தின் பின்னர் தொடர்ச்சியாக இடம்பெற்ற 4 மரணங்களைத் தொடர்ந்து, இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது 09 நோயாளர்களுக்கு இந்த வகை காய்ச்சல் தொற்றியிருக்கக்கூடும் என சந்தேகிப்பதாகவும் இதனை “மலோடி அசீஸ்” நோயாக இருக்கலாம் என சந்தேகிப்பதாகவும், மாவட்ட மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் பி.பேரம்பலம் தெரிவித்தார்.

“சிறியவர்கள் மற்றும் முதியவர்களைத் தாக்கும் இந்தக் காய்ச்சலை ஆரம்பத்தில் அடையாளப்படுத்துவதன் மூலம் உயிரிழப்புகளைத் தவிர்க்கமுடியும் என்பதுடன், திருக்கோவில், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பகுதி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பகுதிகளில் ஒலி பெருக்கி மூலம் மக்களை விழிப்பூட்டும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன” எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# அனாதரவாக ஆணின் சடலம்



மட்டக்களப்பு, டிசெ.22

மட்டக்களப்பு, கும்புறுமூலை வெம்பு காட்டுப்பகுதியிலிருந்து உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம், நேற்றுப் பிற்பகல் மீட்கப்பட்டுள்ளதாக, வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்து குறித்த பிரதேசத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தைக் கண்டெடுத்துள்ளதாகத் தெரிவித்தனர்.

குறித்த சடலத்தை அடையாளம் காட்ட பொதுமக்கள் முன்வரவேண்டுமெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் 45 - 50 வயதுக்குட்பவட்டவராக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டக்களப்பில் 79 வேட்புமனுக்கள் ஏற்பு




மட்டக்களப்பு , டிசெ.22

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டாவது கட்டமாகக் கோரப்பட்ட 8 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்கோரலில் 81 வேட்புமனுக்கள் கிடைக்கப்பெற்று அவற்றில் 79 ஏற்றுக் கொள்ளப்பட்டன. இரண்டு நிராகரிக்கப்பட்டுள்ளன என்று மட்டக்களப்பு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் மாவட்ட அரசாங்க அதிபருமான மாணிக்கம் உதயகுமார் நேற்றுத் தெரிவித்தார்.

மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டமை குறித்து அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே, அவர் இதனைத் தெரிவித்தார்.

“இந்த 8 சபைகளுக்குமென 84 கட்டுப்பணங்கள் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் 81 வேட்பு மனுக்களே தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மட்டக்களப்பு மாநகரசபை, காத்தான்குடி நகர சபை, கோரளைப் பற்று மேற்கு, கோரளைப்பற்று வடக்கு, மண்முனை தென் எருவில் பற்று, மண்முனை மேற்கு, மண்முனை தென்மேற்கு, போரதீவு பற்று ஆகிய பிரதேச சபைகளுக்கான வேட்பு மனுத்தாக்கல் நேற்றைய தினம் பகல் 12 மணியுடன் நிறைவடைந்தன. இதன்போது, 81 வேட்பு மனுக்கள் கிடைக்கப்பெற்று 79 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இரண்டு நிராகரிக்கப்பட்டுள்ளன” என்று மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவித்தார்.(அ)

## அம்புலன்ஸில் சென்று யாழில்

# பரீட்சை எழுதிய மாணவர்கள்

யாழ்ப்பாணம், டிசெ.22

யாழ்ப்பாணத்தில், க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எழுதும் மாணவர்கள் இருவர், அம்புலன்ஸில் பரீட்சை மண்டபத்துக்குச் சென்று பரீட்சை எழுதிய சம்பவம் ஒன்று, நேற்று இடம்பெற்றுள்ளது.

குப்பிளான் மற்றும் வசாவிளான் பகுதியைச் சேர்ந்த இரு மாணவர்களே இவ்வாறு பரீட்சை எழுதியுள்ளனர்.

குறித்த மாணவர்களில் ஒருவர் காய்ச்சலாலும், மற்றையவர் பாம்புக்கடிக்கு இலக்கான நிலையிலும், தெல்லிப்பழை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இரு மாணவர்களும், நடைபெற்றுக்கொண்டிருக்கும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் என்பதால், வைத்திய நிபுணர் மற்றும் தாதியர்கள் விசேட கவனம் செலுத்தி இருந்தனர்.

மாணவர்கள் இருவரும் பரீட்சை எழுதும் அளவுக்கு உடல் தகுதியை அடைந்திருந்த போதிலும், அவர்களை இரு நாட்களுக்கு மருத்துவ கண்காணிப்பில் வைத்திருக்க வேண்டிய தேவை இருந்தமையால், மாணவர்கள் இருவரையும் வைத்தியசாலையில் தங்கவைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

மறு நாள் மாணவர்கள் பரீட்சை எழுத செல்ல வேண்டி இருந்தமையால், மாணவர்கள் இருவரையும் அம்புலன்ஸில் தாதியர்கள் இருவரின் துணையுடன் பரீட்சை மண்டபத்துக்கு தெல்லிப்பழை வைத்தியசாலை வைத்திய நிபுணர் அனுப்பி வைத்திருந்தார். (அ)



## ஒரு வியாபாரி தன்ரை பிள்ளையைக் கொண்டாறதுதானே வழமை!

காலமையே குழப்பமாப் போச்சுது. மழை வாறதும் போறதுமாக் கிடந்திது. மழைத் தூறலைக் கண்டால் வீட்டிலை சந்நதம் ஆடத் துவங்கிவிடுவினம். போனால் சளிபிடிக்கும், இருமல் வரும் எண்டு ஆளுக்காள் பரியாரிமார் மாதிரி ஒவ்வொரு கிரந்தம். நான் காதுக்கை பஞ்சை வைச்சமாதிரி அவை சொல்லுற ஒண்டையும் கேளாததைப் போலை சைக்கிளை எடுத்ததுதான் தெரியும் பேப்பர் கடையடியிலை போய் நிண்டன்.

முதலி பேப்பரை ஒரு தரம் மேஞ்சு முடிஞ்சு இரண்டாவது தரமும் அரைவாசி பாக்கிறன் எண்டான். என்னடா இண்டைக்கு ஸ்பெஷல் எண்டன். வழக்கமான ஒரு கோமாளிக் கூத்துத்தான் எண்டு செய்தியை வாசிக்கிறன் கேள் எண்டான்.

உள்ளூராட்சித் தேர்த்தலில் மாவையின் மகன் களமிறங்கவுள்ளதாகத் தமிழரசுக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜாவின் மகன் கலையமுதன் போட்டியிடவுள்ளார். கடந்த காலத்தில் இந்தியாவில் தங்கி இருந்து கல்வி கற்றுவந்த கலையமுதன் தற்போது நாடு திரும்பியுள்ளார்.

வலி வடக்கு பிரதேச சபையில் போட்டியிடவுள்ளார். வலி.வடக்குப் பிரதேச சபையில் முன்னாள் தவிசாளர் எஸ்.சுகிர்தன் மற்றும் முன்னாள் உப தவிசாளர் எஸ். சஜீவன் ஆகியோரும் தமிழரசுக் கட்சி சார்பாகப் போட்டியிடுகின்றனர் என்று உறுதி செய்யப்பட்டு உள்ளதாகத் தமிழரசுக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

“களம் இறங்குகிறார்” – இது கிறிக்கெற் மச்சிலை அடிகாரர் அடிக்க இறங்கேக்கை சொல்லுற வர்ணனை மாதிரி எல்லேகிடக்கு. இந்தா இறங்கிறார் அடிச்சுக் கிளிக்கப் போறார் எண்டு. பெரிய வீரன்களெல்லாம் இறங்கி முதல் பந்திலையே அவுட்டாகி ஒண்டும் அடிக்காமை வெறுங் கையோடை வாறதும் வழமைதானே?

மற்றது உதென்ன விளையாட்டு? கடை முதலாளி ஓராள் தனக்கு வயசுபோட்டுதெண்டு கொண்டுபோய்ப் பிள்ளையளைக் கல்லாவிலை இருத்திறமாதிரி. உதென்ன தமிழரசுக் கட்சியை மாவைக்கு எழுதிக் குடுத்தாச்சோ? பரம்பரையா ஆள வெளிக்கிடுகினம். ஏன் கட்சியிலை வேறை ஆக்கள் இல்லையோ? இல்லாட்டி வலி .வடக்கிலை வேறை ஆக்கள் இல்லையோ? மாவை ஏன் உப்பிடிச் செய்ய வேணும். உது ஒரு உதறு காலியின்ரை வேலை எல்லே? இப்ப அவரிட்டைக் கேட்டால் என்ன சொல்லுவார் எண்டு தெரியுமே? “நான் என்ன செய்யிறது. கட்சித் தொண்டர்கள் விரும்பினம். அவை வற்புறுத்தினம். அவையின்ரை ஆக்கினைக்காண்டித்தான் மோனை கேக்க விட்டிருக்கிறன்” எண்டு ஒரு பாட்டுப்பாடுவர்.

இந்தியாவிலை போய் படிச்சிட்டு வந்த ஆளை வேறை ஏதாவது தொழிலுக்கை விட்டிட்டு உண்மையான ஒரு ஆளைக் கேக்க விடலாமே எண்டு சொல்ல, முதலி சொல்லுறான்,” அண்ணை! தொழில் ஏன் பாக்கிறது. வருவாய் காண்டி எல்லே? இப்ப இதுகும் ஒரு தொழில்தானே? மற்ற எல்லாத்திலும்விட வருவாய் கூடின தொழில். இதிலை இருந்து உழைச்சவைக்குத் தான் இந்தத் தொழிலின்ரை உருசி தெரியும். உந்தக் கொம்பனியள் விளம்பரப்படுத்திற மாதிரி “வீட்டை சும்மா இருந்து, நோகாமல் உழைக்கலாம்”. எதிலை எண்டால், அரசியலிலை. அது தெரிஞ்சுதானே மகிந்தா தன்ரை வாருசுகளை அரசியலிலை இறக்கினவர். அவங்களும் தேப்பன் நினைச்ச மாதிரி வாங்கிச் சேத்துப் போட்டாங்கள். பல விசியங்களிலை தேப்பனை வெண்டிட்டாங்கள்.

வழக்கமா ஒரு வியாபாரி என்னத்தைச் செய்வரோ, அதே மாதிரி இவரும் செய்திருக்கிறார். கடையைப் பெடியிட்டைப் பாரம் குடுத்திருக்கிறார். இல்லாட்டித் தன்ரை பங்கை எழுதிக் குடுத்திருக்கிறார். அது பிழையே? எண்டு முதலி கேக்கிறான். முதலி கேக்கிறதிலையும் ஞாயங் கிடக்கெண்டுதான் நான் நினைக்கிறன். இப்ப அவை சேத்து வைச்ச சொத்தைப் பாதுகாக்க வேணுமெல்லே? அதுக்கும் அரசியல் வேணுமெல்லே? மாவையை மாவைக் கந்தனெண்டாலும் காப்பாத்தட்டும். வேறை ஒண்டும் சொல்லுறதிக்கில்லை. வாறன்!

- வில்லங்கம் விநாசி

## நிறைமதியின் கலைவிழா






கைதடி மத்தி குமரநகரில் அமைந்துள்ள நிறைமதி முன்பள்ளியின் கலைவிழா கடந்த வாரம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்த வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் மாணவர்களுக்கான பதக்கங்களை அணிவித்தும், சான்றிதழ்களையும் வழங்கியும் கௌரவித்தார்.(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக் கட்சியும் நேற்று வேட்பு மனு

யாழ்ப்பாணம்,டிசெ.22
எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை முன்னிட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யாழ். மாவட்டத்திலுள்ள சகல உள்ளூராட்சி சபைகளிலும் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை நேற்று வியாழக்கிழமை தாக்கல் செய்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகத்தில் குறித்த வேட்பு மனுக்கள் கையளிக்கப்பட்டன. யாழ். மாவட்டத்திலுள்ள ஒரு மாநகரசபை, 3 நகரசபைகள் மற்றும் 12 பிரதேச சபைகளில் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்களே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரால் தாக்கல் செய்யப்பட்டது. (அ)




## அந்த நாள் ஞாபகம்.....!



**1963.12.22**

லக்கோனியா என்ற டச்சுக் கப்பல் போர்த்துக்கலில் மூழ்கியதில் 128 பேர் கொல்லப்பட்டனர்.

## 31,000 இலங்கையர்களுக்கு இரட்டைக் குடியுரிமை




கொழும்பு,டிசெ.22
இரட்டைக் குடியுரிமை பெற்றுக் கொள்வதில் புலம் பெயர்ந்து வாழும் இலங்கையர்கள் அதிக ஆர்வம் காட்டுவதாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் நேற்று வியாழக்கிழமை தெரிவித்தது. 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து இதுவரை 31000 இலங்கையர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டு ஜெனரால் எம். நிஹால் ரணசிங்க தெரிவித்தார்.
இலங்கையில் இரட்டைக் குடியுரிமை பெற்றுக் கொள்வதற்காக ஒருவர் 3 இலட்சம் ரூபாய் பணமும், அவரது மனைவி மற்றும் பிள்ளைகளுக்குத் தலா 50000 ரூபாய் பணமும் செலுத்த வேண்டும். இதற்கான விண்ணப்பங்கள் பாரிய அளவில் திணைக்களத்துக்குக் கிடைத்துள்ளதாகத் தெரிவித்தார்.
விண்ணப்பங்களைப் பரிசோதித்துப் பொருத்தமானவர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்குவதற்குக் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் விரைவாக நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## வெட்டுப் புள்ளி நிர்ணயம் விசாரணைக்கு வர வேண்டும்

கொழும்பு,டிசெ.22
தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய மாணவ, மாணவியர் பிரபல பாடசாலைகளுக்காக விண்ணப்பம் செய்வது தொடர்பான வெட்டுப் புள்ளி நிர்ணயம் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன நேற்று முன்தினம் புதன்கிழமை தெரிவித்தார்.
மேலும் எந்தப் பாடசாலை என்று பாராது, அதிகாரிகளின் மோசடிகளுக்குத் துணை போகாது நியாயமான அடிப்படையில் எவ்வாறு வெட்டுப் புள்ளிகள் நிர்ணயம் செய்யப்பட்டன என்பதை நாட்டுக்கு அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும். கொழும்பு விசாகா கல்லூரிக்கான வெட்டுப்புள்ளி 189, றோயல் கல்லூரிக்கான வெட்டுப் புள்ளி 187 ஆகும். எனினும், ஹோமகம மற்றும் மாத்தறை மகிந்த ராஜபக்ச கல்லூரிகளின் வெட்டுப்புள்ளிகள் 171 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது எவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டது என்பது தொடர்பில் நியாயமான சந்தேகம் ஒன்று எழுந்துள்ளதாகத் தெரிவித்தார். (அ)

## கிறீன் டீ இல் போதைப் பொருள்

கொழும்பு,டிசெ.22
கிறீன் டீ என்ற பெயரில் வெளிநாடுகளுக்கு அனுப்பத் தயார்நிலையில் வைக்கப்பட்டிருந்த ஒரு வகைப் போதைப் பொருள் கொழும்பு நாகலன்வீதியப் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் புதன்கிழமை மீட்கப்பட்டது.
542 கிலோ கொண்ட குறித்த போதைப் பொருள் சாம்பியாவிலிருந்து விமானம் ஊடாகக் கொண்டு வரப்பட்டு, அமெரிக்கா மற்றும் பிரிட்டன் முதலான நாடுகளுக்கு அனுப்பத் தயார்நிலையில் வைக்கப்பட்டிருந்ததாக விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் களனி மற்றும் வெல்லம்பிட்டிய பிரதேசங்களைச் சேர்ந்த ஆண் ஒருவரும், பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டனர். இது குறித்த மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

## நாமலின் கேள்வி காரணம் என்ன?

கொழும்பு,டிசெ.22
ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அஸ்பெஸ்டஸ் கூரைத் தகடுகளுக்கான தடையை நீக்க அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தனது டுவிட்டர் பக்கத்தில் நேற்று வியாழக்கிழமை கேள்வி எழுப்பினார்.
சுகாதாரக் காரணங்களின் அடிப்படையில் அஸ்பெஸ்டஸ் கூரைத் தகடுகளைத் தடை செய்வதென்பது முன்னாள் சுகாதார அமைச்சராகவிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நிலைப்பாடாக இருந்தது. ஆனால் ஏன் அவர் தற்போது அந்தத் தடையை விலக்கியுள்ளார்? இதற்குக் காரணம் சுகாதாரம் தொடர்பான அவதானம் போய் விட்டதா? அல்லது வெளிநாடு மற்றும் வர்த்தகம் தொடர்பான மற்றுமொரு தவறான கொள்கையா ? என ஜனாதிபதியிடம் கேள்வியெழுப்பினார். (அ)





## கொழும்பில் சர்வதேச நிதி நகரத்துக்கான கட்டடம்

கொழும்பு,டிசெ.22
கொழும்புத் துறைமுக நகரத்தில் கொழும்புச் சர்வதேச நிதி நகரத்துக்கான கட்டடத் தொகுதியொன்று நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான முதலீடு ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். நேரடி வெளிநாட்டு முதலீடாக இந்த நிதியினைப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவான வகையில், பெரு நகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு மற்றும் வரையறுக்கப்பட்ட கொழும்புத் துறைமுக நகரத் தனியார் நிறுவனம் ஆகியவற்றுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடப்பட உள்ளது. இது தொடர்பில் பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்கரணவக்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (அ)

## சர்வதேச தரத்தில் இறைச்சிக் கடைகள்

கொழும்பு,டிசெ.22
கொழும்பு நகர சபையின் எல்லைக் குட்பட்ட இறைச்சிக் கடைகள் சர்வதேச தரத்துக்கு உயர்த்தப்படவுள்ளது. எதிர்வரும் காலங்களில் சர்வதேச தரத்துக்கமைய இறைச்சிக் கடைகளை மாற்ற வேண்டும் எனக் கொழும்பு நகர சபையின் பிரதான நகர கால்நடை அதிகாரி தர்மவர்தன நேற்றுத் தெரிவித்தார்.
சுகாதாரப் பாதுகாப்பு முறையில் இறைச்சிக் கடைகள் பேணப்பட வேண்டும் எனவும் அதற்கமையச் சுகாதாரமான முறையில் ஆடு, மாடு, பன்றி மற்றும் கோழி இறைச்சிகளை விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். (அ)

## மனுத் தாக்கல் செய்தது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி



யாழ்ப்பாணம்,டிசெ.22
யாழ். மாவட்டத்திலுள்ள 16 உள்ளூராட்சி சபைகளுக்குமான வேட்பு மனுக்களை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று வியாழக்கிழமை தாக்கல் செய்தது.
இதன் போது கருத்துத் தெரிவித்த அவர், "ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மீதான நம்பிக்கையுடன் மக்கள் காத்திருக்கின்றார்கள். அன்றாடப் பிரச்சினை, அபிவிருத்திக்கான தீர்வு, அரசியல் உரிமைக்கான தீர்வு என்ற அடிப்படைக் கோரிக்கைகளை இதன் போது முன்வைத்துள்ளோம். கடந்த காலத்தில் தமிழ் தலைமைகள் தவறான வழி நடத்தல்களின் கீழ் மக்களைக் கொண்டு சென்றுள்ளார்கள். அந்த வழிநடத்தல்களை நீக்கி மக்களின் நம்பிக்கையினை வென்றெடுக்கும் வகையில் தீர்வு காணுவோம்" என உறுதிபடத் தெரிவித்தார்.(அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஐ. நா. அமைதிப் படைக்கு மேலும் இலங்கை இராணுவம்

ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப் படை பணிகளுக்கான இலங்கை இராணுவத்தினரின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி மாலியில் நிலைகொண்டுள்ள ஐக்கிய நாடுகளின், அமைதிப்படையில் இலங்கைப் படையினரின் எண்ணிக்கையை அதிகரிக்கப்படும் என அவர் கூறினார்.

உலகின் ஏனைய நாடுகளுக்கு இணையாக இலங்கையின் படையினரை காட்ட முடியும் என்றும் அவர் தெரிவித்தார். 1960 ஆம் ஆண்டில் இருந்தே இலங்கைப் படையினர் ஐக்கிய நாடுகளின் அமைதிப் படையில் அங்கம் பெற்றனர். தற்போது இலங்கையின் 17ஆயிரம் சிப்பாய்களும் 300 அதிகாரிகளும் அமைதிப் படை பணிகளில் ஈடுபட்டுள்ளனர் என்றும் மகேஸ் சேனநாயக்க கூறியுள்ளார். (ச)




## யாழில் வெற்றிகரமாக இதய அறுவை சிகிச்சை

யாழ்ப்பாணம், டிசெ.22

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் திறந்த இதய அறுவை சிகிச்சை ஒன்று வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியாவைச் சேர்ந்த 27 வயதுடைய நபருக்கே இந்த அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள குறித்த நபர், தற்போது ஆரோக்கியமாக உள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

வெற்றிகரமாக சத்திர சிகிச்சையை மேற்கொண்ட விசேட வைத்திய குழுவிற்கு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன வாழ்த்து தெரிவித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

## சிவமோகன் மீது பெண் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, டிசெ. 22

நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் தன்னை தடுத்து வைத்தார் என பெண் வேட்பாளர் பரபரப்பு குற்றச்சாட்டு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் புளொட் அமைப்பின் சார்பில் போட்டியிடும் இளங்கோபுரம் விசுவமடு வினைச் சேர்ந்த மஞ்சுளா என்பவர் இக்குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் கையெழுத்திட சென்றபோதே தான் தடுத்து வைக்கப்பட்டார் என நேற்றுக் காலை அப்பெண் வேட்பாளர் புதுக்குடியிருப்பு பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனிடையே அப்பெண்ணைத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் சிவமோகன் எம்.பியின் ஆதரவாளர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார். (ச)

## ஊழல் சட்டத்தில் திருத்தம்

கொழும்பு, டிசெ. 22

30 வருட காலம் பழைமை வாய்ந்த இலஞ்ச, ஊழல் சட்டம் திருத்தி அமைக்கப்படவுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சரத் ஜயமான்ன தெரிவித்துள்ளார். ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் வ்வாறு கூறியுள்ளார்.

இந்தச் சட்டத்தில் உள்ள ஓட்டைகளை பயன்படுத்தி குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்பிக்க முனையும் நபர்களுக்கான வழிவகைகளை முற்றாக இல்லாது செய்வதே தமது நோக்கமாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார் என, அரசாங்க தகவல் திணைக்களம் செய்தி வெளியிட்டுள்ளது. (ச)

## தொடர்ச்சிகள்

### யாழ்.மாவட்டத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நா. வேதநாயகன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று நண்பகல் 12 மணியுடன் நிறைவுற்றது. தொடர்ந்து மாலை 6 மணிக்கு அவர் ஊடகவியலாளர்களை சந்தித்தார்.

இதன்போது, நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் யாழ். மாவட்டத்தின் 16 சபைகளில் போட்டியிடுவதற்காக 127 பேர் கட்டுப்பணம் செலுத்தி இருந்தனர். இவர்களில் 125 பேரே வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர்.

இவற்றில் 5 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன. ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தாக்கல் செய்த 4 சபைகளுக்கான மனுக்களும் ஒரு சுயேச்சைக் குழுவினதும் வேட்பு மனுக்களே இவ்வாறு நிராகரிக்கப்பட்டன. (ச)

### 24 இலங்கையர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர்.

எனினும் நாடு கடத்தப்பட்டவர்களில் இருவர் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனையோரை மினுவங்கொட நீதிமன்றில் முற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

2015 ஆட்சி மாற்றத்தின் பின்னரும் இலங்கையில் இராணுவத்தின் சித்திரவதைகள் மற்றும் துன்புறுத்தல்கள் தொடர்கின்றன என அண்மையில் அசோசியட் பிரஸ் தகவல் வெளியிட்டிருந்தது.

திருப்பி அனுப்பப்பட்டவர்களில் அனேகமானவர்கள் 2012 ஆம் ஆண்டளவில் அவுஸ்ரேலியா சென்றவர்களாவர். இவர்களில் அதிகளவானோர் சித்திரவதை மற்றும் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகியே அவுஸ்ரேலியாவில் அகதி அந்தஸ்து கோரினர். அவர்களை திருப்பி அனுப்பியமை தவறு என்று மனித உரிமைகள் அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன. (ச)

### புளொட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டம் இருந்து ஏ.கே 47 துப்பாக்கி ஒன்று, கைத்துப்பாக்கி ஒன்று, அவற்றுக்கு பயன்படுத்தும் மகஸின்கள் 4 மற்றும் 2 வாள்கள் மீட்கப்பட்டிருந்தன.

தற்போது வடக்கில் இடம்பெறும் வாள்வெட்டுச் சம்பவங்களுக்கும் இவ்வாறான வாள்களே பயன்படுத்தப்படுகின்றன. ஆகவே இவருக்கும் வாள்வெட்டுக்குழுவுக்கும் தொடர்புகள் இருக்குமா? என்பது தொடர்பில் தாம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

### முல்லைத்தீவிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்றில் கருத்து தெரிவித்தபீறற் இளஞ்செழியன்,

" கட்சியின் கொள்கை மற்றும் முடிவுகளுக்கு நான் கட்டுப்படுவேன் என்று தெரிவித்தே தேர்தலில் போட்டியிடுவதற்கு விண்ணப்பித்திருந்தேன். அந்த வகையில் கட்சியின் முடிவை நான் ஏற்றுக் கொண்டேன்.

ஆனால் "இளைஞர்களைப் பலமாக அமைத்தே பிரதேசசபை தேர்தல்களில் வெற்றி பெறுவோம்" என எமது கட்சியின் தலைவர் சில வாரங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

ஆனால் கரைதுரைப்பற்று பிரதேச சபையிலே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் அணி சார்பாக எந்த ஒரு இளைஞரும் போட்டியிடவில்லை . வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவமேகன் செல்வாக்குகளின் அடிப்படையில் நிதியை பெற்று வேட்பாளர்களை நியமித்துள்ளார் "என்ற குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனிடம் கேட்டபோது,"இளைஞர் அணித் தலைவர் கூறிய குற்றச்சாட்டுக்கள் உண்மையில்லை. எல்லோருக்கும் பிரததேச சபைகளில் போட்டியிட வேண்டும் என்ற ஆசை உண்டு. ஆனால் மக்கள் செல்வாக்கு உள்ளவர்களைத் தான் பிரதேச சபைகளின் வேட்பாளர்களாக தெரிவுசெய்யமுடியும். இது எனது முடிவு அல்ல கட்சியின் முடிவு" என்று தெரிவித்துள்ளார். (அ)

### நடராஜனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிக்கையை இந்திய வெளியுறவு அமைச்சு முன்னெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. குறிப்பாக, உள்ளூராட்சித் தேர்தலில் இந்தியாவுக்குச் சார்பான கூட்டணி ஒன்றைப் பலமாக அமைப்பதில் பின்னணியைச் சந்தித்ததாகவும் அவர் மீது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஒரு தகவல் வெளியான போதும், அதனை உறுதி செய்ய முடியவில்லை.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் புதிய இந்தியத் துணைத் தூதுவராக கண்டித் துணைத் தூதரகத்தின் அதிகாரி ஒருவரை நியமிக்க இந்தியத் தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதுவராக சுமார் 3 ஆண்டுகளாகப் பதவி வகித்த ஆ.நடராஜன் , சகல தரப்புகளையும் இந்தியத் துணைத்தூதரகத்தின் கண்காணிப்பில் வைத்திருப்பதில் வெற்றி கண்டிருந்தார். அவர் 'றோ' அதிகாரி எனவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில், அவர் மீள இந்தியாவுக்கு அழைக்கப்பட்டிருப்பது பலத்த சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது. (அ)

### ராசாவும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலட்சத்து 76 ஆயிரம் கோடி ரூபா வரை நஷ்டமும், இந்திய அரசுக்கு பெரும் இழப்பும் ஏற்பட்டது. தனியார் நிறுவனங்கள் கொள்ளை இலாபம் அடித்தன. இந்த ஊழல் இந்தியாவையே உலுக்கியது.

ஆ.ராசா மற்றும் அவரது உதவியாளர் , தொலை தொடர்பு அதிகாரிகள், அரச நிறுவன அதிபர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி உட்பட 14 பேர் சிறையில் அடைக்கப்பட்டனர். கனிமொழி 6 மாதம் சிறையில் இருந்து பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

வழக்கை இந்திய உயர் நீதிமன்றின் கண்காணிப்பில் சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஓ.பி. ,சைனி விசாரித்து வந்தார். ஸ்பெக்ட்ரம் ஊழலில் ஆதாயம் பெற்ற டி.பி.,ரியாலிட்டி நிறுவனம் மூலம் எளிதாக 214 கோடி ரூபா நிதி கலைஞர் தொலைக்காட்சிக்கு கைமாறியது. இதில் பங்குதாரரான கனிமொழியின் பங்கும் இருந்தது என்பது குற்றச்சாட்டு.

நீதிபதி ஓ.பி.சைனி தனது தீர்ப்பில் "இது ஒரு புனையப்பட்ட வழக்கு. ராசா, கனிமொழி உள்ளிட்ட 14 பேரும் குற்றமற்றவர்கள்" என அறிவித்தார்.(அ)

### வேட்புமனுக்களைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டத்திலுள்ள ஒரு மாநகர சபை, மூன்று நகர சபைகள் மற்றும் 12 பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தது. நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈஸ்வரபாதம் சரவணபவன் உள்ளிட்டவர்கள் இணைந்து வேட்புமனுக்களை யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரிடம் கையளித்தனர். (அ)

### முற்றவெளியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடலத்தை எரியூட்ட தொல் பொருள் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது. இதேபோன்று பொது இடத்தில் உடலை எரியூட்டுவதற்கும் யாழ். மாநகர சபை அனுமதி வழங்கவுள்ளது.

தலைமைப் பிக்குவின் உடலம் அங்கு எரியூட்டப்படுவதால், இனி அவ்விடத்தில் புதிய விகாரை ஒன்று எழுப்பப்படலாம் எனக் கூறப்படுகின்றது. (ச)


உங்கள் துயரில் பங்கெடுக்கவும், உறவுகளுக்கு அறிவிக்கவும்

மரண அறிவித்தல்
நினைவஞ்சலி
கண்ணீர் அஞ்சலி

கட்டணம் இன்றி பிரசுரிக்க

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

எதிரொலி Ethiroli

021 3004848

நிபந்தனை களுக்குட்பட்டது


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# பாதைக்குப் பூட்டு!

சவுதி,டிசெ.22

கட்டாருடனான நிலவழி எல்லைப் பகுதியைச் சவுதி அரேபியா கடந்த திங்கட்கிழமை நிரந்தரமாக மூடியது.

இது குறித்துச் சவுதியின் சுங்க வரித் துறை நிர்வாகத்தரப்பில் செவ்வாய்க்கிழமைவெளியிட்ட கடிதத்தில் கூறும்போது,“சால்வா எல்லைப் பகுதி திங்கட்கிழமையிலிருந்து நிரந்தரமாக மூடப்பட்டது” எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.இதனைச் சவுதி அதிகாரிகளும் உறுதிப்படுத்தினர்.

தீவிரவாதத்துக்குக் கட்டார் ஆதரவளிப்பதாகக் குற்றம் சாட்டி அந்த நாட்டுடனான தூதரக உறவைச் சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேற், பஹ்ரைன், எகிப்து ஆகிய நாடுகள் அண்மையில் துண்டித்தன. இதன் காரணமாக் கட்டார் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து சவுதி ஜூன் மாதம் இரண்டு வாரங்கள் கட்டார் உடனான நிலப்புற எல்லைப் பகுதியை மூடியது. இந்த நிலையில் தற்போது கட்டாருடனான நிலப்புற எல்லைப் பகுதியை சவுதி நிரந்தரமாக மூடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ)



## ஆர்.கே நகருக்கான தேர்தல்

# வாக்குப் பதிவு நேற்று

சென்னை,டிசெ.22

தமிழகத்தின் ஆர்.கே. நகர்த் தொகுதிக்கான இடைத்தேர்தல் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராம், மரணித்ததையடுத்து, ஆர்.கே.நகர்த் தொகுதி வெற்றிடமானது. இந்த நிலையில், ஒரு வருடத்தின் பின்னர் நேற்று நடைபெற்றது.

ஜெயலலிதா ஜெயராம், மரணிப்பதற்கு முன்னர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற போது எடுக்கப்பட்ட காணொளி நேற்று முன்தினம் வெளியிடப்பட்டமையால் பெரும் சர்ச்சை ஏற்பட்டது. ஆகையால் குறித்தகாணொளிக்குத் தேர்தல் ஆணையம் தடைவிதித்துள்ளது. (இ)

## பலாத்காரத் தந்தைக்கு

# 115 ஆண்டு சிறை



மலேசியா,டிசெ.22

மகளை நான்கு ஆண்டுகளாக மிரட்டிப் பலாத்காரம் செய்த தந்தைக்கு 115 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து மலேசிய நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை தீர்ப்பளித்தது.

நாட்டின் குவாந்தான் நகரில் 53வயதான நபர் தனது மனைவி மற்றும் 5 பிள்ளைகளுடன் வசித்து வந்தார்.மீனவரான ஐந்து பிள்ளைகளின் தந்தை தனது 20 வயது மூத்த மகளைக் கடந்த நான்கு ஆண்டுகளாக மிரட்டிப் பலாத்காரம் செய்து வந்தார். குறித்த விடயம் மகளின் தாய்க்குத் தெரிந்தும் கணவர் மீதுள்ள பயம் காரணமாகத் தடுக்கவில்லை.

இந்த நிலையில் கடந்த மாதத்திலிருந்து இரண்டாவது மகளுக்கும் தந்தை பாலியல் தொல்லை கொடுக்கத் தொடங்கியதையறிந்த சகோதரி “தான் பட்ட கஷ்டத்தைத் தனது சகோதரியும் அனுபவிக்கக் கூடாது” என நினைத்துத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு தனது தந்தையின் செயல் குறித்துப் பொலிஸில் கடந்த 13 ஆம் திகதி புகாரளித்தார்.

தொடர்ந்து தந்தையை உடனடியாகக் கைது செய்த பொலிஸார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்திய போது அவர் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதையடுத்து அவருக்கு 115 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், 24 பிரம்படியும் வழங்கி நீதிமன்றம் தீர்ப்பளித்தது. (இ)

# ஈரானில் நிலநடுக்கம்

தெஹ்ரான்,டிசெ.22

ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் இருந்து 40 கி.மீற்றர் தொலைவில் தென்மேற்கிலுள்ள மெஷ்கிண்டாஷ்ட் நகரில் நேற்று வியாழக்கிழமை 5.2 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதனால் ஏற்பட்ட பொருட்சேதம் உள்ளிட்ட விபரங்கள் உடனடியாக வெளியிடப்படவில்லை. இந்த நிலநடுக்கம் தெஹ்ரான் உட்பட ஈரானின் வடக்கே பல்வேறு நகரங்களிலும் உணரப்பட்டது.

கடந்த நவம்பரில் மேற்கு ஈரானில் 7.2 அளவில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தினால் 600 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.(இ)

## இசைப் புயலுக்காகப் பாடும்

# சூப்பர் ஸ்ரார்





சென்னை,டிசெ.22

இந்தியாவின் பிரபலப் பாடகர் ஏ ஆர் ரஹ்மானுக்காக நடிகர் ரஜினிகாந்த் பாடவுள்ளார்.

ஒஸ்கார் நாயகன் ஏ ஆர் ரஹ்மான் தனது இசைப் பயணத்தைத் தொடங்கி 25 ஆண்டுகள் நிறைவு பெற்றமையை முன்னிட்டு இந்தியா முழுவதும் தற்போது இசைக் கச்சேரி நடத்தி வருகிறார், அந்த வரிசையில் தலைநகர் டெல்லியில் அவர் இன்று நடத்தவுள்ள நிகழ்ச்சியில் நடிகர் ரஜினிகாந்த் கலந்துகொண்டு பாட்டுப் பாடவுள்ளார்.

‘ என்கோர்’ என்ற தலைப்பில் இந்திராகாந்தி விளையாட்டு அரங்கில் இந்த இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது. அதிலே ஏ.ஆர்.ரகுமானைக் கௌரவிக்கும் வகையில் ரஜினிகாந்த் கலந்து கொண்டு பாடவுள்ளார். (இ)

# ஆதரவளித்தால் அனைத்தும் ரத்து



நியூயோர்க்,டிசெ.22

ஜெருசலேம் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையில் முன்வைக்கப்படும் பிரேரணைக்கு ஆதரவு தெரிவிக்கும் நாடுகளுக்கு, அனைத்து உதவிகளும் ரத்துச் செய்யப்படுமென்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று வியாழக்கிழமை எச்சரிக்கை விடுத்தார்.

ஜெருசலேத்தை இஸ்ரேலின் தலைநகராக அமெரிக்கா அண்மையில் அங்கீகரித்தது. ஆனால் ஜெருசலேம் தொடர்பான அனைத்துத் தீர்மானங்களையும் ரத்துச் செய்யும் வகையிலான பிரேரணையொன்று ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் வாக்கெடுப்புக்கு வருகிறது.ஆகையால் இதற்கு ஆதரவளிக்கும் நாடுகளுக்கு அமெரிக்கா வழங்கும் உதவிகள் அனைத்தும் ரத்துச் செய்யப்படும் என அமெரிக்க அதிபர் எச்சரித்துள்ளார்.

“தங்களிடம் பல பில்லியன் டொலர்களை உதவியாகப் பெற்றுக் கொண்டு தங்களுக்கு எதிராகவே வாக்களிக்கும் நாடுகள் தமக்குத் தேவையில்லை”என அவர் தெரிவித்தார். (இ)

# இளமையானார் அஜித்

சென்னை,டிசெ.22

விசுவாசம் படத்தில் அஜித்குமார் மீண்டும் இளமையான தோற்றத்தில் அவதாரமெடுத்துள்ளார்.

அஜித்குமார் நடிக்கும் புதிய படத்துக்கு ‘விசுவாசம்’ என்று பெயரிடப்பட்டு உள்ளது. சிவாவின் இயக்கத்தில் ஏற்கெனவே வேதாளம், வீரம், விவேகம் ஆகிய 3 படங்கள் தொடர்ச்சியாக வந்தன.

மீண்டும் நான்காவது தடவையாக விசுவாசம் படத்தில் இருவரும் இணைந்துள்ளார்கள். சமீபத்திய படங்கள் அனைத்திலும் அஜித்குமார் லேசாக நரைத்த தாடி வைத்த தோற்றத்தில் வந்தார். ஆனால் விசுவாசம் படத்தில் இளமையான தோற்றத்தில் காட்சியளிக்கிறார். (இ)

# ஐ.எஸ். தாக்குதல் திட்டம் முறியடிப்பு

லண்டன்,டிசெ.22

பிரிட்டன் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்த 4 ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டனர்.

குறித்த தீவிரவாதிகள் கிறிஸ்மஸ் தின கொண்டாட்டத்தின் போது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்ததாகவும்,கைது செய்யப்பட்டவர்கள் 31, 22, 36 மற்றும் 41 வயதுடையவர்கள் எனவும் பிரிட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இதன் மூலம் பாரிய தாக்குதல் திட்டமொன்று முறியடிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அவர்கள் கைது செய்யப்பட்ட இடம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (இ)

# போட்டோவால் போனது வாழ்க்கை



சென்னை,டிசெ.22

பிரபலத் தொலைக்காட்சியின் தொகுப்பாளினியாகிய டிடி இன் திருமண விவாகரத்துக்கான காரணம் சில கருத்து டிடி இன் ஒரு புகைப்படமாகும்.

காபி வித் டிடி நிகழ்ச்சியின் மூலம் அறிமுகமாகிப் பல நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கியவர் திவ்யதர்ஷினி. இவர் இரண்டு வருடத்துக்கு முன்பு ஸ்ரீகாந்த் என்பவரைத் திருமணம் செய்தார். தற்போது இவர்கள் இருவரும் விவாகரத்துச் செய்ய முடிவெடுத்துள்ளனர்.

திருமணமாகி மூன்று ஆண்டுகளான நிலையில் இவர்களுக்குள் சில கருத்து வேறுபாடு காரணமாகத்தான் இப்படி ஒரு முடிவு எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவரின் கணவர் ஸ்ரீகாந்த் சிறு வயதில் இருந்தே டிடியின் நண்பர். ஆனால் அவருக்கு டிடி சினிமாவில் நடிப்பது பிடிக்கவில்லையாம். அத்தோடு சில நாட்களுக்கு முன் சர்ச்சையை ஏற்படுத்திய பாடகி சுசித்திராவின் சுச்சி லீக்ஸ் லிஸ்டில் இடம் பெற்ற டிடியின் அந்த ஒரு புகைப்படமே தான் முக்கிய காரணமாகும்.

மேலும் இருவரும் தனியே பிரிந்து வாழ்கிறார்களாம். டிடி ரசிகர்களுக்கு இது வருத்தம் தான். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடியில் கோஹ்லி

புதுடில்லி, டிசெ. 22

2017 ஆம் ஆண்டின் விலை மதிப்புமிக்க பிரபலமானவர்கள் பட்டியலில் விராட் கோஹ்லி முதலிடத்தை பிடித்துள்ளார்.

சர்வதேச மதிப்பு மற்றும் விளம்பரம் மூலம் சம்பாதிக்கும் பணம் அடிப்படையில் இந்தியாவின் மிகவும் விலை மதிப்பு மிக்க பிரபலமானவர்கள் பட்டியல் ஆண்டுதோறும் வெளியிடப்படுகிறது.

இந்தாண்டுக்கான பட்டியலில் நடிகர் ஷாருகானை முந்தி இந்திய கிரிக்கெட் அணி தலைவர் விராட் கோஹ்லி முதலிடம் பிடித்துள்ளார்.

கோஹ்லியின் விலை மதிப்பு இந்த ஆண்டில் 2,215 கோடி இலங்கை ரூபாவாகும். பட்டியலில் ஷாருக்கான் 1,629 கோடி ரூபா மதிப்புடன் இரண்டாமிடத்தில் உள்ளார்.

நடிகை தீபிகா படுகோன் ( 1,48 கோடி ரூபா) 3-வது இடத்திலும், அக்ஷய் குமார் 4-வது இடத்திலும், ரன்விர்சிங் 5-வது இடத்திலும் உள்ளனர். இந்திய அணி வீரர் டோனியின் மதிப்பு 2014 ஆம் ஆண்டில் 1,104 கோடி ரூபா இருந்த நிலையில் இந்தாண்டு 321 கோடி ரூபாவாக் குறைந்துள்ளது. (ச)



# கோஹ்லி – அனுஷ்காவை வாழ்த்தினார் மோடி

புதுடில்லி, டிசெ. 22

அண்மையில் திருமண பந்தத்தில் இணைந்த விராட் கோஹ்லி - அனுஷ்கா சர்மா தம்பதியினர் நேற்றுமுன்தினம் இந்தியப் பிரதமரைச் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இதுதொடர்பாக பிரதமர் அலுவலக ருவிற்றர் பக்கம் வெளியிட்ட பதிவில், “இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் விராட் கோஹ்லி மற்றும் நடிகை அனுஷ்கா சர்மா இருவரும் பிரதமரைச் சந்தித்தனர். அவர்களின் திருமணத்துக்கு மோடி வாழ்த்துத் தெரிவித்தார்” என்று குறிப்பிட்டுள்ளது.

இத்தாலியில் டிசம்பர் 11 அன்று தனிப்பட்ட முறையில் நடைபெற்ற நிகழ்வில் இருவரும் திருமணம் செய்து கொண்டனர். இது குறித்து விராட் கோஹ்லி தன் ருவிற்றரில் பதிவிடும்போது,

“வாழ்நாள் முழுதும் அன்பின் பிணைப்பில் இணைய இன்று இருவரும் உறுதிமொழி பூண்டோம். உங்களுடன் இந்தச் செய்தியைப் பகிர்ந்து கொள்வதில் ஆசிர்வதிக்கப்பட்டதாக உணர்கிறோம். இந்த அழகிய நாள் எங்கள் குடும்பத்தினர், ரசிகர்கள், நலம் விரும்பிகள் ஆகியோருடன் சிறப்பு வாய்ந்ததாக விளங்குகிறது. எங்கள் பயணத்தின் முக்கிய அங்கம் வகிப்பதற்கு நன்றி” என்று தெரிவித்திருந்தார்.



# மிற்சல் ஸ்ராக் சந்தேகம்!

சிட்னி, டிசெ. 22

ஆஷஸ் டெஸ்ட் தொடரின் 4-வது ஆட்டத்தில் அவுஸ்ரேலிய வேகப்பந்து வீச்சாளர் மிற்சல் ஸ்ராக் விளையாடுவது சந்தேகம் என தகவல்கள் வெளியாகி உள்ளன.

இங்கிலாந்து அணிக்கு எதிரான முதல் 3 போட்டிகளிலும் வெற்றி பெற்ற அவுஸ்ரேலியா தொடரை 3-0 என கைப்பற்றியது. இந்தத் தொடரின் 4 ஆவது ஆட்டம் வரும் 26 ஆம் திகதி மெல்போர்னில் தொடங்குகிறது.

“பாக்சிங் டே” டெஸ்ட் என அழைக்கப்படும் இந்த ஆட்டத்தில் அவுஸ்ரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளரான மிற்சல் ஸ்ராக் விளையாடுவது கேள்விக்குறியாகி உள்ளது.

பேர்த்தில் நடைபெற்ற 3ஆவது டெஸ்ட் போட்டியின் 4 ஆம் நாள் ஆட்டத்தின் போது ஸ்ராக் காயம் அடைந்தார். நேற்று அவருக்கு ஸ்கான் எடுக்கப்பட்டது. இதன்போது அவரது வலது குதிகாலில் சிராய்ப்பு இருப்பது தெரியவந்தது. இதனால் அவர், மெல்போர்ன் டெஸ்டில் களமிறங்குவது சந்தேகம் என்றே கருதப்படுகிறது. அவர் விளையாட முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் ஜேக்சன் பேர்ட்டுக்கு வாய்ப்பு கிடைக்கக்கூடும். (ச)

## வேகநடைப் போட்டி உடுவிலில் இன்று

உடுவில், டிசெ. 22

யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப்பிரிவினரால் நடத்தப்படும் பிரதேச செயலகங்களுக்கிடையிலான வேக நடைப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 6மணிக்கு உடுவில் பிரதேச செயலகத்துக்கு முன்பாக இடம்பெறவுள்ளது.

ஆண் பெண் இருபாலாருக்கும் 10 கிலோமீற்றர் தூரம் கொண்ட இந்த வேக நடைப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் அந்தந்தப் பிரதேச விளையாட்டு அலுவலர்களுடன்தொடர்பு கொண்டு பங்கு பற்றுமாறு மாவட்ட விளையாட்டு அதிகாரி க .விஜிதரன் கேட்டுள்ளார்.(அ-66)

# ஐ.பி.எல். ஏலம்

புதுடில்லி, டிசெ. 22

ஐ.பி.எல். ருவென்ரி - 20 போட்டிக்கான ஏலம் வரும் ஜனவரி 27, 28 ஆம் திகதிகளில் நடக்கவுள்ளது.

இம்முறை ஏலத்தில் இரு வருடத்தடை விதிக் கப்பட்ட சென்னை சுப்பர் கிங்ஸ், ராஜஸ் தான் றோயல்ஸ் அணிகள் கலந்து கொள்ளவுள்ளன.

இதனால் இம்முறை ஏலம் குறித்த எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. ஏலத் தொகையும் அணிக்கு 80 கோடி இந்திய ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே ஏலத்தை முன்னிட்டு உள்ளூர் ருவென்ரி - 20 போட்டித் தொடரை முற்கூட்டியே நடத்த இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நடத்தத் திட்டமிட்டுள்ளது. (ச)


**Techno World**
(வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவில் வீதி)
A/L தொழில்நுட்ப பிரிவு - 2020
தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் (SFT)
**சக்தி** (யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)
**ராகவன்** (யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி)
**முருகநிரோஜன்** (யா/வயாவிளான் ம.கல்லூரி)
**மதுசூதன்** (யாழ் பல்கலைக்கழகம்)
பொறியியல் தொழில்நுட்பவியல் (E-TEC)
**அருண்குமார்** (யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி)
**ஜெகநாதன்** (விரிவுரையாளர், தொழில்நுட்பக்கல்லூரி)
**சிவஜன்** (தொழில்நுட்பக்கல்லூரி)
உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் (Bio - Tec)
**திருக்குமரன்** (நெல்லியடி மகா வித்தியாலயம்)
**கலைதீபன்** (நெல்லியடி மகா வித்தியாலயம்)
**பொன் சிவகுமார்**
ICT
**லவன்** (உதவி விரிவுரையாளர், கணனி விஞ்ஞானம்)
**உமாகாந்தன்** BIT (யா/மத்திய கல்லூரி)
புவியியல் – **ஜெனகன்** (J.H.C)
விவசாய விஞ்ஞானம் – **சாரங்கன்**
இலகு கணிதம் – **ஹரிகரன்**
சித்திரம் – **ஜெயந்தன்** (J.H.C)
ஊடகக்கல்வி – **கோணேஸ்**
பொருளியல் – **பிரதீபன்**
வணிகக்கல்வி – **தீசன்**
கணக்கீடு – **சுகிர்தன்**
0770175346, 077 1703549


# கன்னியமர்விலேயே சச்சின் க்ளீன் போல்ட்



புதுடில்லி, டிசெ. 22

இந்திய நாடாளுமன்றில் நேற்று காங்கிரஸ் எம்.பிக்கள் அமளியில் ஈடுபட்டதால், நியமன எம்.பி சச்சின் டெண்டுல்கர் பேச முடியாமலே போய் விட்டது.

நாடாளுமன்றில் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் குறித்து பிரதமர் மோடி கூறிய கருத்துக்கு அவர் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. நேற்றும் இந்த அமளி தொடர்ந்தது.

முன்னதாக குஜராத் தேர்தல் பிரசாரத்தின்போது, ‘‘பாகிஸ்தான் தூதருடனான சந்திப்பில், முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் குஜராத் தேர்தல் தொடர்பாக ஆலோசனை நடத்தினார்’’ என்று பிரதமர் மோடி தெரிவித்திருந்தார்.

இதற்கு மோடி மன்னிப்பு கேட்க வேண்டும் என்றுகூறி, மாநிலங்களவையில் காங்கிரஸ் எம்.பிக்கள் அமளியில் ஈடுபட்டனர். பிரதமர் மோடிக்கு எதிராக தொடர்ந்து கோங்கள் எழுப்பப்பட்டது. இதனால் அவை மீண்டும் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டன. பின்னர் பிற்பகலில் அவை கூடியபோது, இந்திய விளையாட்டின் எதிர் காலம் பற்றி, நியமன எம்.பியும், இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சச்சின் டெண்டுல்கர் முதன் முறையாக பேச முயன்றார். அப்போதும் காங்கிரஸ் எம்.பிக்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர். இதனால் அவர் தொடர்ந்து பேச முடியாத நிலை ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 22.12.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.